01.10.2024 முதல் 31.12.2024 வரை மூன்று மாதங்களுக்கு சம்பளம் வழங்கும் அதிகாரம்.

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை – 600 009

பள்ளிக் கல்வி இயக்குநர் அலுவலகம்
25 OCT 2024
சென்னை-06

வாய்மையே வெல்லும்

**கடித(efile)எண். 10016 /பக5(1)/2023–1, நாள்: 25.10.2024**

அனுப்புநர்
திருமதி. சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள் /சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர்கள், சென்னை–01 / 08 / 35.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.
ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி –அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் இரண்டாம் கட்டமாக கல்வியில் பின் தங்கிய 26 ஒன்றியங்களில் 20 மாதிரிப் பள்ளிகள் 2013–2014 ஆம் கல்வி ஆண்டில் தொடங்கப்பட்டு அப்பள்ளிகளுக்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத 624 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டது– இப்பணியிடங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டது –தற்போது 01.10.2024 முதல் 31.12.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் வழங்கும் அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல்–சார்பு.

பார்வை:
1. அரசாணை (நிலை) எண்.47, பள்ளிக்கல்வி சி(2)த்துறை, நாள்.20.03.2013.
2. அரசாணை (1டி) எண்.140, பள்ளிக் கல்வி பக5(1)துறை, நாள்.23.08.2021.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் செய்ல்முறை ந.க. எண். 011657 /எல்/இ3/2021, நாள்.13.03.2024.
4. கடித (e file) எண்.6937/ப.க5(1)/2024, நாள்.24.07.2024.
5. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.011657/எல் / இ3/2021, நாள்.02.07.2024.

------

பார்வை 1–இல் காணும் அரசாணையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வி திட்டத்தின்கீழ் தமிழ்நாட்டில் இரண்டாம் கட்டமாக 11 மாவட்டங்களில் கல்வியில் பின்தங்கியுள்ள 26 ஒன்றியங்களில் 26 மாதிரிப் பள்ளிகள், 6 முதல் 12 வகுப்புகள் கொண்ட பள்ளிகளாக, 2013–2014 ஆம் கல்வியாண்டில் தொடங்கிடவும், இம்மாதிரிப் பள்ளிகளில் பள்ளி ஒன்றிற்கு 17 ஆசிரியர் மற்றும் 7 ஆசிரியரல்லாத பணியிடங்கள் என 624 பணியிடங்களைத் தோற்றுவித்தும்

ஆணை வெளியிடப்பட்டது. பார்வை 2–இல் காணும் அரசாணையில், பார்வை 1–இல் காணும் அரசாணையில் தோற்றுவிக்கப்பட்ட 624 ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.04.2021 முதல் 31.03.2024 வரை தற்காலிக தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டது. பார்வை 3 –இல் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் செயல்முறைகளின்படி 01.04.2024 முதல் 30.06.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதிய கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டது. பார்வை 4–இல் காணும் அரசுக் கடிதத்தில் இப்பணியிடங்களுக்கு 01.07.2024 முதல் 30.09.2024 வரை ஊதிய கொடுப்பாணை வழங்கப்பட்டு முடிவடைந்த நிலையில், தற்போது இப்பணியிடங்களுக்கு 01.10.2024 முதல் 31.03.2025 வரை மேலும் ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக்கல்வி இயக்குநர் அரசை கேட்டுக்கொண்டுள்ளார்.

2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கருத்துருவை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, மேற்குறிப்பிட்டுள்ள 624 தற்காலிக ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாத பணியிடங்களுக்கு 01.10.2024 முதல் 31.12.2024 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெற்று வழங்க ஏதுவாக ஊதிய கொடுப்பாணை (Pay Authorization) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான 01.10.2024 முதல் 31.12.2024 வரை மூன்று மாதங்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில், ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

3. இக்கடிதம், அரசாணை (நிலை) எண்.334, நிதி(சம்பளம்)துறை, நாள்.22.10.2024–இல் துறை செயலாளருக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகார பகிர்வின்படி வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

25/10/24

(அரசு சார்புச் செயலாளர்)
அரசு செயலாளருக்காக.

25/10/2024

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
நிதி(கல்வி–II) துறை , சென்னை–9.
சார்ந்த மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: இயக்குநரக ந.க.எண்: 011657/எல்/இ3/2021 நாள். 25.10.24
தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது.

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்

இயக்குநர்
28/10/2024